
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL 08, 2024

திங்கட்கிழமை ஏப்ரல் 08, 2024 | ஒளி: 09 கதிர்: 229 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# இன்று சூரிய கிரகணம்

இந்த ஆண்டின் முதவாவது சூரிய கிரகணம் இன்று திங்கட்கிழமை (08) நிகழவுள்ளது. இது, தென்மேற்கு ஐரோப்பா, கிழக்கு ஆசியா, ஆவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், வட துருவம், தென் துருவம் ஆகிய பகுதிகளில் தென்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது,

இலங்கை நேரப்படி, சூரிய கிரகணம் இரவு 9.12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. 9 ஏப்ரல் 2024 அன்று அதிகாலை 2.22க்கு நிறைவடையும்.

தொடர்ச்சி P2

# “கண்ணிவெடி அகற்றல் இறுதிக்குள் நிறைவு”



2030ஆம் ஆண்டுக்கு பின்னரே இலங்கையை கண்ணிவெடி அற்ற நாடாக பிரகடனப்படுத்த முடியும் என்ற ஒரு நிலைப்பாடு எழுந்தது. எனினும், இந்த வருட இறுதிக்குள் பெரும்பாலான வகையில் கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்குள் செல்லக்கூடிய நிலை ஏற்படும் என எதிர்பார்ப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “ஏப்ரல் 15 பொது விடுமுறை அல்ல”




ஏப்ரல் 15ஆம் திகதி பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துவதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சிங்கள - தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 15ஆம் திகதியை பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துமாறு அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியுடன் இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனினும், ஏப்ரல் 15ஆம் திகதியை பொது விடுமுறையாக அறிவிப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இம்முறை, சிங்கள-தமிழ் புதுவருடம், வார விடுமுறை நாட்களில் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# “விலகும் எண்ணம் இல்லை”

தீவிர அரசியலில் தான் தொடர்ந்தும் ஈடுபடப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அரசியலில் இருந்து விலகும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

பல அரசியல்வாதிகள் தன்னை சந்தித்து நலம் விசாரிக்க வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனா அல்லது வேறு எந்தக் கட்சியிலிருந்தும் யாரும் தம்மை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராகக் கேட்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.





## தமிழ்–சிங்களப் புத்தாண்டுக்கான

# தின்பண்ட செலவு 2% குறைந்தது

தமிழ்-சிங்களப் புத்தாண்டுக்கான பாரம்பரியத்தின் பண்டங்களுக்கான செலவு 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் குறைந்துள்ளது. ஆனால் 2019ஆம் ஆண்டிலிருந்ததை விடத் தொடர்ந்தும் இரண்டு மடங்கு அதிகமாகவே உள்ளது.

வெரிட்டேரிசேர்ச் நிர்வகிக்கும் இலங்கையின் பொருளாதார விபரங்களை வழங்கும் முன்னணி தளமான PublicFinance.lk முன்னெடுத்த “புத்தாண்டு” தின்பண்டங்களுக்கான வருடாந்தச் செலவு தொடர்பிலான ஆய்வில் இந்த விபரம் தெரியவந்துள்ளது.

இது பொருட்களுக்கான செலவு 2023ஆம் ஆண்டை விட 2024ஆம் ஆண்டில் 2 சதவீதத்தால் குறைந்துள்ளதைக் காட்டுகிறது.

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டில் செலவு 2.3 மடங்கு அதிகரித்திருந்தது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் இது சற்றுக் குறைந்து 2.2 மடங்காக உள்ளது.

தொடர்ச்சி P2

# இளநீர் லொறிக்கு குழந்தை பலி




இரண்டரை வயது குழந்தை வீதியை கடக்கமுயன்ற போது, இளநீர் ஏற்றிக்கொண்டுவந்த லொறியொன்று மோதியதில் அக்குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்த சம்பவம் அம்பாறையில், ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

அம்பாறை இகினியாகல நாமல் ஓயா ஏரியின் ஆரம்ப பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த குழந்தை இகினியாகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. எனினும், குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்துள்ளார். விபத்து தொடர்பில் இளநீர் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.



# காட்மோர் விவகாரத்தில் நால்வருக்கு விளக்கமறியல்

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா, காட்மோர் தமிழ் வித்தியாலயம் மாணவனின் மரணம் சம்பந்தமாக நான்கு பேர் கைது செய்யப்பட்டு ஹட்டன் நீதவான் முன்னிலையில் சனிக்கிழமை (06) ஆஜர்படுத்தபட்ட போது அந்த நால்வரையும் எதிர்வரும் 19 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவத்தை அடுத்து, ஹட்டன் வலய கல்விப் பணிமனை அதிகாரிகள் காட்மோர் தமிழ் வித்தியாலயத்துக்கு விஜயம் செய்து விசேட கூட்டமொன்றை நடத்தினர் அதில், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் செயலாளர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2

# இசைக்கருவிக்குள் ஐஸ் சிக்கியது

## கொட்டாஞ்சேனையில் சம்பவம்



கொட்டாஞ்சேனை, சுமித்ராராம மாவத்தையில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலில் சுமார் நான்கு கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் இசைக்கலைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸார் தெரிவித்தனர்.

372 போதைப் பொருட்களையும், 1 கிலோ 558 கிராம் ஐஸ் போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் அத்துடன் சந்தேநபரையும் கைது செய்துள்ளனர்.

ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் பொலிஸ் குழுவொன்று குறித்த வீட்டைச் சுற்றிவளைத்து சோதனை நடத்தியதுடன், இசைக்கருவிகளுக்கு மத்தியில் டிரம்மொன்றில் போதைப்பொருள் கவனமாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சந்தேக நபர் சில காலமாக, இசைக்கருவிகளை வாடகைக்குக் கொடுப்பதில் ஈடுபட்டு இருந்துள்ளார். அந்த போர்வையில் பாரியளவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# மொட்டுவின் அரசியல் பீடம் செவ்வாய் கூடும்

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் பீடக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது என அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆராயப்படும். இதில், பெரமுனவின் ஸ்தாபகத்தலைவர் பஷில் ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாகக் கட்சியின் அங்கத்தவர்கள் கருத்து வெளியிடுவதற்குக் கடந்த கூட்டத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அந்தக் கட்டுப்பாடுகளை மீறி தொடர்ச்சியாக சில உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2

# பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி

மாவனெல்லை, பதியதொர பிரதேசத்தில் சனிக்கிழமை (06) இரு குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலை தீர்த்துவைப்பதற்காக சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த பொலிஸார் மீது தாக்குதலை நடத்துவதற்கு முற்பட்ட வேளையில், பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சண்டையில் ஈடுபட்ட நபரொருவர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியதாகவும், பின்னர்,

தொடர்ச்சி P2

# நடனத்தை பாதுகாக்க ஜனாதிபதியின் குழு



கண்டிய நாட்டியக் கலையின் செழுமையான கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் பேணுதல் தொடர்பான குழுவொன்றை அமைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்களுடனான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்றது. இதன் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் கலாசார விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் காட்சி மற்றும் கலைப் பல்கலைக்கழகம் போன்ற தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இருப்பார்கள். கண்டியின் பாரம்பரிய நடனக் கலைஞர்களின் குரல்கள் கேட்கப்படுவதையும் அவர்களின் நலன்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதையும் உறுதி செய்வதற்காக இந்தக் குழுவில் அவர்களின் பிரதிநிதி ஒருவரை இணைத்துக்கொள்வதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “கண்ணிவெடி அகற்றல் இறுதிக்குள் நிறைவு”




கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வுக்கான சர்வதேச தினத்தையொட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை (06) விசேட நிகழ்வும், கிரிக்கெட் போட்டியும் முன்னெடுக்கப்பட்டது.

இதில், அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் சர்வதேச அமைப்புகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் நன்றிகளைக் கூறிய ஆளுநர் , மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல நடவடிக்கைகளுக்குக் கண்ணிவெடி அகற்றப்படாமை பாரிய சவாலாக காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

பூநகரி மற்றும் முகமாலை பகுதிகளில் அதிகளவு கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார். இந்த செயற்பாடுகளில் பணியாற்றிக் கொண்டிருப்போர், தங்களின் உயிர்களைப் பணயம் வைத்து ஆற்றிவரும் சேவைக்கு நன்றிகளைத் தெரிவித்ததோடு, மீள்குடியேற்ற செயற்பாடுகளை நிறைவு செய்யக் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் என ஆளுநர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் பெண்களை ஈடுபடுத்திய நாடு என்ற பெருமையை இலங்கை கொண்டுள்ளது. அந்தவகையில், இலங்கையில் பெண்கள் முதன் முதலாகக் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை வவுனியாவில் ஆரம்பித்தமையை நினைவுபடுத்திய ஆளுநர், இந்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பெண்களுக்குத் தனது விசேட நன்றிகளையும், பாராட்டுதல்களையும் கூறினார்.



# இன்று சூரிய கிரகணம்

சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகியவை ஒரே நேர்கோட்டில் வருகின்ற போது நிலா சூரிய ஒளியை முற்றிலும் மறைக்கும் வகையில் இருக்கும். இதன்போது, சந்திரன் முழு கிரகணத்தை உருவாக்கி, சூரியனின் முழு மேற்பரப்பையும் மறைக்கும். சந்திரனின் ஒளி பூமியின் மேற்பரப்பில் பயணிக்கும் சிறிய பகுதி முற்றிலும் இருளாக்குகிறது.

இலங்கையர்கள் காணக்கூடிய அடுத்த கிரகணம் 2025 செப்டெம்பர் 7ஆம் திகதி ஏற்படவுள்ள சந்திர கிரகணமாகும் என பேராசிரியர் ஜயரத்ன தெரிவித்தார்.

மேலும், இன்றைய சூரிய கிரகணம் வட அமெரிக்கா முழுவதும் தென்படும். இந்நிலையில் வட நயாகராவில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

# நடனத்தை பாதுகாக்க ஜனாதிபதியின் குழு

மேலும், இலங்கையின் கலாசார பாரம்பரியத்திற்கு அவர்கள் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பை அங்கீகரிக்கும் முகமாக, பாரம்பரிய கண்டிய நடனக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கண்டிய நடனம் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பிரபலமடைந்துள்ளதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி விக்ரமசிங்க, இக்கலை வடிவத்துடன் தொடர்புடைய பாரம்பரிய நடைமுறைகள் மற்றும் சடங்குகளைப் பாதுகாப்பது தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். புதிதாக அமைக்கப்பட்டுள்ள குழு, எதிர்கால சந்ததியினருக்கு கண்டிய நடனத்தை எவ்வாறு திறம்படப் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது என்பதற்கான பரிந்துரைகளை வழங்கும் பணியை மேற்கொள்ளும்.

மேலும், சப்ரகமுவ நடனம் போன்ற நாட்டின் ஏனைய பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, கண்டியில் உள்ள பாரம்பரிய நடனக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தேவையான ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெறுவதை உறுதிப்படுத்துமாறு அதிகாரிகளுக்குப் பணித்தார்.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் சிறந்த நாட்டை உருவாக்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட ஜனாதிபதி விக்ரமசிங்கவின் முன்முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கண்டியில் உள்ள பாரம்பரிய நடனக் கலைஞர்கள் இலங்கையின் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பாராட்டினர்.



# காட்மோர் விவகாரத்தில் நால்வருக்கு விளக்கமறியல்

மாணவனின் இறப்புக்கு அதிபரும் பொறுப்பு கூறவேண்டுமென வலியுறுத்திய பெற்றோர், அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். கோரிக்கையை ஏற்று, அதிபரை இடமாற்றம் செய்த அதிகாரிகள், பிரதி அதிபரைத் தற்காலிக அதிபராக நியமித்தனர்.

கொங்கிறீட் குழாய்கள் பாடசாலை வளாகத்தில் போடப்பட்ட போது அப்போதைய அதிபர் எவ்விதமான எதிர்ப்பும் தெரிவிக்காத காரணமாக இந்த துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என பெற்றோர்கள் அதிகாரிகளிடம் எடுத்துக்கூறினர்.

சம்பவத்தில் உயிரிழந்த மாணவனான தரம் 6 இல் கல்வி பயின்ற எஸ்.அனீஷன், சம்பவ தினமான வெள்ளிக்கிழமை (05) பிற்பகல், மலசலக்கூடத்துக்குச் சென்றபோதே, அந்த கொங்கிறீட் குழாய்களில் ஒன்று உருண்டுவந்து மோதித்தள்ளியுள்ளது.



# தின்பண்ட செலவு 2 % குறைந்தது

செழுமை மற்றும் மகிழ்ச்சியைக் குறிக்கும் இலங்கையின் பாரம்பரிய இனிப்புகள் பல புத்தாண்டுக்கான தின்பண்டங்களில் இடம்பெறும். குடும்பங்களுக்கு இடையே இவற்றில் வித்தியாசங்கள் காணப்பட்டாலும், பாரம்பரிய புத்தாண்டு இனிப்புப் பண்டங்களில் பொதுவாகப் பாற்சோறு, கொக்கிஸ், வாழைப்பழம், அலுவா, பணியாரம், தொதல், பயத்தம் பணியாரம் மற்றும் பட்டர் கேக் ஆகியவை இடம்பிடிக்கும்.

இந்தப் பகுப்பாய்வில் பிரபல யூடியூப்சேனலான “அப்பேஅம்மா” சேனலில் உள்ள சமையல் குறிப்புகளின் அடிப்படையில், 4-5 நபர்களைக் கொண்ட குடும்பத்திற்குத் தேவையான அளவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமான பொருட்கள் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன, மின்சாரம், எரிவாயு மற்றும் மசாலாப் பொருட்களுக்கான செலவுகள் இதில் உள்ளடக்கப்படவில்லை. 2019 (ஏப்ரல் வாரம் 1),2023 (ஏப்ரல் வாரம் 1) மற்றும் 2024 (மார்ச் வாரம் 3) ஆகியவற்றுக்கான கொழும்பு மாவட்ட திறந்த சந்தையின் வாராந்த சராசரி சில்லறை விலைகள் உட்பட விலைகளுக்கான தரவு நேரடியாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது.

# பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி

இன்னொரு பொலிஸ் அதிகாரி துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்ட பொலிஸ் அதிகாரியையும் குறித்த நபர் தாக்க முற்பட்ட போதே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் மேலும் கூறியுள்ளனர். சம்பவத்தில், பொலிஸாரை தாக்க வந்த குறித்த நபரின் தந்தையே (வயது 53) பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தால் தாக்கப்பட்ட நபர் சிகிச்சைக்காக மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் , மாவனெல்லை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாரை தாக்கிய நபர் பிரதேசத்தை விட்டுத் தலைமறைவாகி விட்டார் என்றும், அவரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துவருவதாகவும் மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

# மொட்டுவின் அரசியல்...

இந்நிலையில், ஜனாதிபதி ரணிலுக்கும், பஷில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான இடம்பெற்ற சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில், இந்த கூட்டத்தில் அறிவிக்கப்படவுள்ளது என்றும், உறுப்பினர்களின் கருத்துகளும் கேட்கப்படவுள்ளன.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் நடத்தப்படும் முதலாவது கூட்டம் இதுவாகும் என்பதுடன், கட்சியின் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# எந்தவொரு கட்சியும் செய்யாத பணியை ஐ. ம. ச. செய்துள்ளது

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்களுக்கு ஏற்படும் பல பேரிடர்களை களைய ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போதைய அரசாங்கம் பெண் பிள்ளைகளின் உடலுறவுக்கான வயதெல்லையை 16இல் இருந்து 14 ஆக குறைத்துள்ளது. பெண் ஆண் பலாத்காரத்தையும் ஒன்றாக இணைத்து பலாத்காரத்தால் அதிகம் பாதிக்கப்படும் பெண்களுக்கு வழங்கப்படும் சிறப்பிடத்தை மறுத்து, 22 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளைப் பலாத்காரம் செய்பவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளைத் தளர்த்த அரசாங்கம் திட்டமிட்டிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் இது தொடர்பில் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பியதன் விளைவாக இந்த அவமானகரமான பிரேரணையை அரசாங்கம் வாபஸ் பெற நேரிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், பெண்களின் ஆரோக்கியத் துவாய் குறித்துப் பேசியதற்காக 2019இல் தான் கேலி செய்யப்பட்டாலும், 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து இது குறித்துப் பேசி வந்தேன். இது குறித்து பாராளுமன்றத்தில் பேசும் போது, சிரித்தனர், கேலி செய்தனர், சமூக வலைத்தளங்கள் மூலம் சேறு பூசினர், என்றாலும், தொடர்ந்து உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்தியதன் விளைவாகப் பாடசாலை மாணவிகளுக்கு இலவச ஆரோக்கியத் துவாய் வசதிகளை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. எந்தவொரு



கட்சியும் செய்யாத பணியை ஐக்கிய மக்கள் சக்தி செய்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் நடைமுறைப்படுத்தப்படும் ‘மக்கள் அரண்’ வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரது பங்கேற்புடன் சனிக்கிழமை(6) குருநாகல் ஹிரிபிட்டிய நகரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், கிராம இராஜ்ய எண்ணக்கருவின் மூலம் மக்களின் கருத்துகளைப் பெறுவதற்கான பொறிமுறை செயல்படுத்தப்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் கிராம இராஜ்ய கருத்திட்டதின் ஊடாக ஒவ்வொரு கிராமம் மற்றும் நகரத்தால் உருவாக்கப்பட்ட முன்மொழிவுகள் அடங்கிய தகவல் மற்றும் தரவுகளை மையமாகக் கொண்ட கொள்கை வகுப்பாக்கத்திற்கு நடவடிக்கை எடுக்க உத்தோசித்துள்ளோம். நாட்டின் குடிமக்கள் நாட்டின் ஆட்சி முறையின் முக்கிய பங்குதாரர்களாகவும், முன்னோடிகளாகவும், தலைவர்களாகவும் ஆக்கப்பட வேண்டும்.

தமது பிரதேசங்களில் அபிவிருத்தி சம்பந்தமான கருத்துகள் மற்றும் முன்னுரிமை பற்றிக் கலந்துரையாடி பொது மக்களும் அரசாங்கமும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயலாற்றுவதற்கு வாய்ப்பினை உருவாக்கும் களமொன்றாக “கிராம இராஜ்ய எண்ணக்கருவை” நடைமுறைப்ப டுத்துவதற்கு நாம் கவனம் செலுத்துவோம்.

தற்போதைய அரசாங்கம் விவசாயியை வாழ வைப்பதற்கு பதிலாக, விவசாயியை அழிக்கவே முயற்சித்து வருகின்றது.

கடந்த காலங்களில் விவசாயிக்குக் கிடைத்த உரங்களை இல்லாமல் செய்து விவசாயம் அழிந்த ஒரு காலம் இருந்தது. இன்றும் விவசாயியை வாழ வைப்பதற்குப் பதிலாக, விவசாயியை அழித்தொழிக்கும் கொள்கையையே தற்போதைய அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

11 வருட 22 பருவ ஆய்வின் பின்னர், பத்தலேகொட விவசாய ஆராய்ச்சி நிறுவனம் இரசாயன மற்றும் சேதன உரங்களின் கலவையிலிருந்து சிறந்த நெல் விளைச்சலைப் பெற முடியும் என்று கண்டறிந்துள்ளது. இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்தினால், அறுவடை 21% முதல் 31% வரை குறைய வாய்ப்புள்ளதாக ஆட்சியாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கையைப் பொருட்படுத்தாமல் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இரசாயன உரங்களைத் தடை செய்து இயற்கை விவசாயத்தை ஒரே தடவையில் மேற்கொண்டதால் விவசாயம் வீழ்ச்சியடைந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

விவசாயத்தைக் கட்டியெழுப்ப மாற்றுச் சக்திகளுக்கு எந்த யோசனையும் இல்லை.

விவசாயம் அழிந்துவிட்ட இந்நேரத்தில், இந்த விவசாயத்தைக் கட்டியெழுப்ப மாற்று அணியினர் கூறிக் கொள்ளும் தரப்பினரிடமும் எந்த திட்டங்களும் இல்லை. தற்போதுள்ள நிலத்தைத் திறம்படப் பயன்படுத்துவதன் மூலமும், புதிய விவசாயத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் அதிக உற்பத்தியை அடைய முடியும்.

கல்வியும் விவசாயமும் SMART ஆக வேண்டும்.

கல்வியைப் போலவே விவசாயமும் ஸ்மார்ட்டாக மாற வேண்டும். எப்போதும் பின்பற்றப்படும் பழமைவாத முறைகளுக்கு அடிமையாகாமல், நாட்டின் விவசாய விளைபொருட்கள் தேசிய உணவுத் தேவைக்கு மட்டுமின்றி புதிய தொழில்நுட்பத்தின் மூலம் ஏற்றுமதி விவசாயத்திற்கும் வழிவகுக்கும் விதமாக மேம்பட வேண்டும். இதற்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும். பல்வேறு டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்தி இடைத்தரகர்கள் இன்றி நேரடியாகச் சந்தைக்குச் செல்லும் முறைமை உருவாக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# “ஓய்வுபெற்ற படைவீரர்களுக்கான நலன் திட்டங்களை மேம்படுத்த அரசாங்கம் தயார்”

'அரசாங்கம் தயார்'

ஓய்வுபெற்ற மற்றும் மருத்துவ காரணங்களுக்காக ஓய்வுபெற்ற படைவீரர்களின் நலன்கள் மற்றும் அவர்கள் நிர்வாக ரீதியாக எதிர்கொள்ளும் சிக்கல் நிலைகள் தொடர்பாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இராணுவ கஜபா படைப்பிரிவில் வைத்து கேட்டறிந்து கொண்டுள்ளார்.



சேவையில் இருந்து ஓய்வுபெற்ற மற்றும் மருத்துவ காரணங்களுக்காக ஓய்வுபெற்ற படைவீரர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் பங்குபற்றும் நிகழ்வு ஒன்று வன்னி பாதுகாப்புப் படையினால் சனிக்கிழமை (06) இராணுவத்தின் கஜபா படைப்பிரிவின் ரெஜிமென்ட் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள வருகை தந்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரை வன்னி பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார வரவேற்றுள்ளார்.

இதன்போது உரையாற்றிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தத்தின் போது உயிர்த் தியாகம் செய்த படை வீரர்களை நினைவு கூர்ந்ததுடன், அவர்கள் தேசத்திற்காக ஆற்றிய சேவைகளையும் பாராட்டியுள்ளார்.

முப்படையினரால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்து அவர் இதன்போது எடுத்துரைத்துள்ளார்.

"நாட்டிற்காகவும், தேசத்திற்காகவும் பல தியாகம் செய்தவர்களின் நலனை நாம் உறுதிப்படுத்துவது இன்றியமையாததாகும். அத்துடன், பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள், ரணவிரு சேவா அதிகாரசபை என்பன இணைந்து ஏனைய பொது நிர்வாக முகவர்களுடன் இணைந்து சுகாதாரம், பொது நிர்வாகம், வங்கி மற்றும் இதர சேவைகளின் உதவிகளைக் கோரும்போது, போர் வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளனர்" என மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது நடைமுறையில் உள்ள



'உறுமய' காணி உறுதி வழங்கும் திட்டத்தின் கீழ் போர் வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நேரடியாகவும் தங்களின் பிரச்சினைகளை முன்வைக்கவும், கருத்து தெரிவிக்கவும் இதன்போது வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) நிஷாந்த மானகே, சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், பெருந்திரளான போர் வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.

## கடலட்டைகளை கடத்திய ஐவர் கைது

றொசேரியன் லெம்பட்

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, சட்ட விரோதமான முறையில் கடல் அட்டைகளை பிடித்து பொதி செய்து கடத்திய 05 பேரை கடற்படையினர் வியாழக்கிழமை (04) கைது செய்துள்ளனர்.

இதன்போது, 589 கடல் அட்டைகள், 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் டைவிங் கியர்கள் மீட்கப்பட்டதாகவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் பகுதியைச் சேர்ந்த 23 முதல்



60 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேகநபர்கள் 05 பேருடன் கடல் அட்டைகள், டைவிங் கியர் மற்றும் 03 ஸ்கூட்டர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

### முகங்களை பார்க்காது தொங்கிய 2 சடலங்கள் மீட்பு

## தகாத உறவில் ஈடுபட்டவர்கள் என தகவல்

ஆ.ரமேஸ்

உடப்புஸ்ஸல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுல்ல-பாஹலகம பகுதியில் வீடொன்றில் இருந்து தங்கள் உயிரை மாய்த்துக்கொண்ட நிலையில், ஆண், பெண் சடலங்கள் சனிக்கிழமை (06) காலை மீட்கப்பட்டதாக உடப்புஸ்ஸல்லாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தாயான டப்ளியூ.எம்.பிரியங்கனி (வயது 42), திருமணமாகாத பி.எம். அனுர பண்டார (வயது 39) ஆகிய இருவரின் சடலங்களே கைப்பற்றப்பட்டுள்ளன. அவ்விருவரின் சடலங்கள் தூக்கில் தொங்கிக்கொண்டிருந்தன,

குறித்த இருவரும் தகாத உறவில் ஈடுபட்டு வந்துள்ளதுடன், இந்த விடயம் பெண்ணின் கணவருக்குத் தெரிய வந்ததையடுத்து, பெண்ணின் கணவரால் பெண் தாக்கப்பட்ட சம்பவம் வியாழக்கிழமை (04) இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, தனது வீட்டை விட்டு வெளியேறி, தகாத உறவைப் பேணி வந்த நபருடன் சென்றுள்ளார். இந்நிலையிலேயே இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வலப்பனை நீதவான் வருகை தந்து பார்வையிட்டு மரண விசாரணை நடத்திய பின் சடலங்கள் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரட்ணலிங்கம் தெரிவு

க.அகரன்

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் செயலாளராக செயற்பட்ட ந.நல்லநாதர் மரணமடைந்த நிலையில் வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிக்கு ர.ரட்ணலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் செயலாளர் பதவி எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு புளொட் அமைப்பிற்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மூத்த தலைவர் நல்லநாதர் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் அண்மையில் மரணமடைந்த நிலையில் அவரின் இடத்திற்காக புளொட் அமைப்பைச் சேர்ந்த நாகலிங்கம் ரட்ணலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## 33ஆவது வருடாந்த பொதுக் கூட்டம்

பேராதனை பல்கலைக்கழக கொழும்புக் கிளையின் (AAUPCC) பழைய மாணவர் சங்க 33ஆவது வருடாந்த பொதுக் கூட்டம், 2024 மார்ச் 31 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பு 07, அபிவிருத்தி நிர்வாகத்துக்கான இலங்கை நிறுவகத்தின் (SLIDA) பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில், கௌரவ அதிதியாக பேராசிரியர் ஜே.பி. திஸாநாயக்க கலந்து கொண்டுள்ளதுடன், இதன்போது 2024/2025 காலப்பகுதிக்கான




நிர்வாக சபை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தலைவராக பிரியத் கப்ரால், பொதுச் செயலாளராக பாலித சியமபலபிட்டிய, பொருளாளராக எஸ்.எம்.ஞானரத்ன, உப தலைவர்களாக இந்திரா ஜயசேகர, ஜகத் தஹநாயக்க, கே.எச்.எம்.எஸ். பிரேமலால், குமுதினி குலதுங்க மற்றும் ஹசந்த பலிஹக்கார, உதவிச் செயலாளர்களாக ஸ்ரீயானி ஜயசிங்க மற்றும் ஷ்யாமலி பெரேரா உதவி பொருளாளராக ரஞ்சித் கருணாரத்ன, இணை ஆசிரியர்களாக பி.பாலசிங்கம், நெலிய பெர்னாண்டோ மற்றும் ஈஷா நாணயக்கார, ஒருங்கிணைப்பாளராக பி.குணசேகரன் கணக்காய்வாளராக எஸ்.சி.மாயாதுன்ன என 30 உறுப்பினர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

## உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



நூருல் ஹுதா உமர்

ரமழான் பெருநாளை முன்னிட்டு, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில், 'அல்மா' நிதியத்தின் உதவியுடன் உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (06) இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸ் தலைமையில், சாய்ந்தமருது இளைஞர் வள நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தேவையுடைய மக்களை அடையாளம் கண்டு சுமார் 4,500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.


இதன்போது, வை.எம்.எம்.ஏ. இன் பல்வேறு மட்ட உறுப்பினர்களும் உதவிகளைப் பெற்றோரும் கலந்து கொண்டுள்ளனர்.

## துப்பாக்கி சூட்டில் இருவர் பலி

மொரகஹஹேன-தல்கஹவில, மாலோஸ் கால்வாய் சந்திக்கு அருகில், முச்சக்கரவண்டி ஒன்றின் மீது, காரில் வந்த குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

கிரிபிட்டிய-பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ரூபசிங்க ஆராச்சிகே நயனானந்த மற்றும் பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த வசந்த பெரேரா ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ள நிற காரில் வந்த குழுவொன்றே



குறித்த தாக்குதல் மேற்கொண்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இருவரும் ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் பல கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 500 போதை குளிசைகளுடன் இருவர் கைது

சட்ட விரோதமான முறையில் போதை குளிசைகள் எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில், சனிக்கிழமை (06) இருவர் கைது செய்யப்பட்டதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலையில் இருந்து பிபிலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பட்டா ரக வாகனமொன்றை, மாவட்டச் செயலாளர் அலுவலகத்திற்கு அருகில் வைத்துச் சோதனையிட்டபோது, சட்டவிரோதமாக எடுத்துச்சென்ற 500 போதை குளிசைகள் மீட்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் கம்பளை, கம்பளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 26 மற்றும் 36 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேக நபர்களையும், மீட்கப்பட்ட போதை குளிசைகள் மற்றும் பட்டா ரக வாகனத்தையும் மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஸ்ரீதரன்- ஸ்ரீ சாய்முரளி சந்திப்பு

இலங்கைக்கான யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் புதிய தூதுவராகப் பொறுப்பேற்றுள்ள ஸ்ரீ சாய்முரளியை, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் அண்மையில், மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது,



ஈழத்தமிழர்களது அரசியல் நலன்சார் விடயங்கள் மற்றும் சமகால நெருக்கடிகள் உள்ளிட்ட பலநிலைப்பட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷுடைய 2024ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், வார்விக் தோட்டம் கீழ் பிரிவு சரஸ்வதி வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதி புனரமைப்பு பணிகள் சனிக்கிழமை (06) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கருத்துரைத்த வடிவேல் சுரேஷ்,

'ஒரு சமூகத்தின் வளர்ச்சி கல்வியிலேயே தங்கியுள்ளது. வார்விக் சரஸ்வதி பாடசாலை குறுகிய காலத்தில் பாரியதொரு





வளர்ச்சினை எட்டியுள்ளது. பாடசாலை வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த அதிபர் ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு, மலையக பாடசாலைகளை தரம் உயர்த்துவதற்கு என்னுடைய பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வரலாற்றின் முதன்முறையாகப் பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு மலையக பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது" என தெரிவித்துள்ளார்.



### தேவை

நாங்கள், முன்னணி பெண்களின் உடைகள் மற்றும் உள்ளக தையல் செயற்பாட்டை முன்னெடுக்கும் நிறுவனம். ஜூகி இயந்திரத்தை இயக்குவோரை நாங்கள் தேடுகின்றோம்.

தகுதிகள்:

# ஜூகி இயக்குவதில் முன் அனுபவம்
# 50க்கும் குறைந்த பெண்களின் உடையை தைக்கவேண்டும்.
# குழுவாக இணைந்து செயற்படும் திறன்.
# சேவை காலம்: திங்கள் முதல் வெள்ளி வரை
# சம்பளம்+தரகு பணம்= ரூ.50,000
# கிருலபனைக்கு அண்மித்தவர்கள் வரவேற்கதக்கது

அழையுங்கள்: 076-2751781 / 011-4349729

# சபிக்கப்பட்ட மரணப் பொறிகளில் சிக்குண்டுள்ள மாணவர்கள்

வீட்டுக்குப் பின்னர் பாடசாலையே தங்களுடைய பிள்ளைகளுக்கு பாதுகாப்பளிக்கும் இடமாகு என்ற அதீத நம்பிக்கையிலேயே ஒவ்வொரு பெற்றோரும் இருக்கின்றனர். எனினும், ஆங்காங்கே நடைபெறுகின்றன சம்பவங்களை பார்க்குமிடத்து, பெற்றோர்களிடத்தில் ஒருவகையான அச்சம் சூழ் கொண்டுள்ளது.

பாடசாலைகளில், மாணவர்களின் பாதுகாப்பே முன்னுரிமையாக இருக்க வேண்டும். கல்வி என்பது இரண்டாம் நிலை. ஆனால், நம் நாட்டில் உள்ள பல பாடசாலைகளின் பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்துவதில்லை. அல்லது பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இல்லை என்றே கூறவேண்டும்.

சில சம்பவங்கள் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தாலும், யானைகளுக்கு வீணை வாசிப்பது போல்தான் இருக்கும். ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் மாலையே அனைத்தையும் அடக்கிவிடுவார்கள். நமது நாட்டில் பல மாணவர்கள் இதுபோன்ற சபிக்கப்பட்ட மரணப் பொறிகளில் சிக்குண்டுள்ளனர்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எவ்விதமான பயமோ சந்தேகமோ இல்லாமல் பாடசாலைகளுக்கு அனுப்புகிறார்கள். தங்கள் குழந்தை வீட்டில் இருப்பதைப் போலவே பாதுகாக்கப்படுகிறது என்ற முழுமையான நம்பிக்கையுடன். வீட்டைத் தவிர ஒரு குழந்தைக்கு நம்பகமான மற்றும் பாதுகாப்பான இடம் பாடசாலை மட்டுமே என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால், அது அவ்வாறு இல்லை என்பது சில சம்பவங்களால் அம்பலமாகின்றது.

பாடசாலை வளாகத்தில் போடப்பட்டிருந்த கொங்கிறீட் வளையங்களில் ஒன்று, உருண்டோடிவந்து மாணவனை முட்டித்தள்ளியதால், மஸ்கெலியா, காட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயின்ற எஸ்.அனீஷன், சம்பவ தினமான வெள்ளிக்கிழமை (05) பிற்பகல் அகால மரணமடைந்தான்.

இயற்கை உபாதையைக் கழிப்பதற்காகச் சென்றிருந்த வேளையிலேயே எதிர்பாராத விதமாக இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது. எனினும், அங்கு கொங்கிறீட் வளையங்களைப் போட்டவர்கள், உருண்டோடக்கூடிய வகையிலேயே விட்டுச்சென்றுள்ளனர்.

மலையகத்தைப் பொறுத்தவரையில் பாடசாலைகளில் பல, பள்ளம், மேடு கலந்த நிலத்திலேயே கட்டப்பட்டிருக்கும். அங்கு கொண்டு வந்து, பாதுகாப்பற்ற முறையில் இவ்வாறு கொங்கிறீட் வளையங்களை விட்டுச்செல்வதை அனுமதிக்கமுடியாது. அதற்கு அனுமதியும் வழங்கியிருக்கக்கூடாது.

சம்பவத்தை அடுத்து பாடசாலைக்கு விரைந்த ஹட்டன் கல்வி வலய அதிகாரிகள், அப்பாடசாலையின் அதிபரை இடமாற்றிய அதிகாரிகள், தற்காலிக அதிபரை நியமித்துள்ளனர். இது அதிரடியாக எடுக்கப்பட்ட தீர்மானம். ஆனால், ஒவ்வொரு சம்பவங்களும் இடம்பெற்றதன் பின்னர், தற்காலிக தீர்வுகளை எட்டாது. பிரச்சினைகளுக்கு நிரந்தமாகத் தீர்வுகாண்பதற்கு வழிசமைக்க வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது முதலாவதுமல்ல, இறுதியானதாக இருக்காது என்பதே உண்மையாகும். ஆகையால், முன்கூட்டிய எச்சரிக்கை தொடர்பில், பாடசாலை நிர்வாகத்தை தெளிவுபடுத்தவேண்டியது பொறுப்பான அதிகாரிகளின் கடமையாகும். அதனடிப்படையில் மாணவர்களை வழிநடத்த வேண்டியது பாடசாலை நிர்வாகத்தின் பொறுப்பாகும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# நிலைபேறான இலங்கையின் தேர்தல் அரசியல்

**லக்ஸ்மன்**

ஜனாதிபதித் தேர்தலோ பாராளுமன்றத் தேர்தலோ இவ்வருடத்தில் நடைபெறவுள்ள நிலையில், இலங்கையின் நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான இயலுமையானது வரி வருமானத்தை அதிகரித்தல், சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், நிதியியல் கட்டமைப்பு மாற்றம் ஆகியவற்றின் செயற்திறன்மிக்க மறுசீரமைப்பினாலேயே சாத்தியமாகும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருக்கிறது.

அதே வேளையில், தேர்தல்களில் இவற்றின் தாக்கம் வலுவானதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வருடத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாகப் போட்டியிட இருக்கின்ற தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) யின் தலைவருமான அனுரகுமார திசாநாயக்க ஆகிய மூவரில் யாருக்கும் 50 வீத பெரும்பான்மை கிடைக்காது.

இரண்டாம் மூன்றாம் விருப்பு வாக்கு கோரும் நிலைமை காணப்படும் என்பதே இன்றைய கள நிலவரமாக இருக்கிறது. இதனை மாற்றியமைப்பதற்கான கோதாவிலேயே போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் ஆதரவைத்திரட்ட முற்பட்டு வருகின்றனர்.

இதற்கிடையில், இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றாகவேண்டும்.

அரசாங்கம் அந்தத் தேர்தலையும் நடத்தாமல் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கோரப்பட்டுத் தேர்தல் நடைபெறாது போனால், இதற்கு முன்னர் நடைபெற்ற அரகலயவினைவிடவும் மிகப்பெரியதொரு போராட்டம் வெடிக்கும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து கடந்த வாரம் மட்டக்களப்பில் நடைபெற்ற ஜனநாயகம் மற்றும் தேர்தல்களின் பால் சமகால சவால்கள் எனும் தலைப்பிலான கருத்தாடல் ஒன்றின்போது தெரிவித்திருக்கிறார்.

தமிழர் தரப்பினைப் பெறுத்தவரையில் தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளர் ஒருவரை களத்தில் இறக்க முயன்று வருகின்றனர். இந்த முயற்சி பலனளிக்குமா? இல்லையா? என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. அதேநேரத்தில், சிறுபான்மைத் தரப்பு என்ற வகையில், முஸ்லிம்கள் தங்களுடைய பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்திக் கொள்வதற்காக நடைபெறவுள்ள தேர்தல்களைப் பயன்படுத்துவார்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்துமில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் சுட்டலின்படி, சமூகப் பாதுகாப்பினை வலுப்படுத்துதல் என்பது சாதாரணமாக ஒதுக்கிவிட்டுப் போகக் கூடிய விடயமல்ல. வடக்கு, கிழக்கில் மத வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படும் நிலை, காணி அபகரிப்புகள், உரிமை மீறல்கள் என நடைபெற்று வருகின்ற பாதுகாப்பற்ற செயற்பாடுகளும் இதனுள் அடக்கம்.

ஒரு பாராக நம்மை முன்னேற்றகரமானதாக மாற்ற வேண்டுமாக இருந்தால் மேற்குறிப்பிட்டவை தவிர வேறு பல்வேறு விடயங்களில் நாம் கவனம் செலுத்தியாகவேண்டும்.

சர்வதேச நாயண நிதியத்தின் கட்டுப்பாடுகள் வரையறைகள் மிகவும் இறுக்கமானதாகவே இருக்கின்றன. அதன் கட்டுப்பாடுகள் அனைத்துமே நாட்டின் மக்களையே பாதித்துக் கொண்டிருக்கின்றன. வெளிப்பேச்சில் நாடு சிறப்பாக இருப்பதாகக் காண்பிக்க முயன்றாலும் மக்கள் பெரும் சிரமங்களையே அனுபவித்து வருகின்றனர்.

இதில் வரிச் சுமை மிகவும் கொடுமையாகவே காணப்படுகிறது. இரண்டாம் கட்ட நிதி விடுவிப்பு நடைபெற்றாலும், மூன்றாவது கட்ட நிதி விடுவிப்பு வரையில் நாடு காத்திருக்கவே வேண்டும். அதற்குள் சர்வதேச கடன் மறுசீரமைப்பில் சீனாவின் ஒப்புதல் தாமதமானால் மூன்றாம் தவணையைப் பெற்றுக்கொள்வதில் மேலும், தாமதம் ஏற்படலாம் என்று ஆலோசிக்கப்படுகிறது.

இதற்குள் அரை நூற்றாண்டையும் தாண்டி நடைபெற்று வருகின்ற தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு இதுவரையில் முன்வைக்கப்படவில்லை. இதற்குள் தொடங்கப்பட்டிருக்கின்ற உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் பற்றிய பேச்சு மீண்டும் தொடங்கப்பட்டிருக்கின்ற வேளையில் மந்திரத்தால் மாங்காய் வீழ்த்த முடியுமா என்று கேட்கவும் தோன்றுகிறது.

1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், சமத்துவம், நீதித்துறைச் சுதந்திரம், சுயாதீனத்தன்மை, சட்டத்தின் முன் யாவரும் சமம் என்கிற விடயங்கள் இதுவரை முறையாகப் பேணப்படுகின்றனவா என்றால் இதிலுள்ள பாகுபாடு வெளிப்படும்.

அரசியலமைப்பின் உறுப்புரைகள் முழுமையாகப் பின்பற்றப்படவில்லை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட சட்ட வாட்சித் தத்துவம் முறையாகப் பின்பற்றப்படவில்லை. நாட்டில் மீண்டும் மீண்டும் வன்செயல் நிகழாமைக்கு உறுதிப்படுத்தலில்லை. அதேநேரம், மீண்டும் மீண்டும் வன்செயல் நடைபெறுவது ஊக்குவிக்கப்படும் நிலைமை காணப்படுகிறது. அரசியலமைப்பை உருவாக்கிய ஆட்சியாளர்களே அரசியலமைப்பை மீறும் நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறிருக்கையில் நாட்டின் நல்லிணக்க, சமத்துவத்துக்கான அடியெடுப்பு எப்படி நடைபெறும் என்பது கேள்வியாகவே இருக்கிறது. இலங்கையின் பல்லினத்தன்மை, பல் மதத்தன்மை, பல் காலாசாரத் தன்மை, மொழி உரிமைகள் முறையாக இதய சுத்தியோடு ஏற்றுக் கொள்ளப்பட்டு முதலில் பின்பற்றப்பட வேண்டும். அல்லாவிட்டால் அது நகைப்புக்குரிய விடயமேயாகவே இருக்கும் என்ற விமர்சனங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. உண்மையிலேயே நல்லிணக்கம் என்பது ஆட்சியாளரதும் நாட்டு மக்களதும் மனங்களிலிருந்து உருவாக வேண்டியதாகும். அதனைச் சட்டங்களை உருவாக்கி ஏற்படுத்த முனைவதானது எம் நாட்டின் மீது இன நல்லிணக்கம் தொடர்பாக சர்வதேச சமூகங்களால் ஏற்பட்டுவரும் அழுத்தத்தைக் குறைப்பாதற்கான ஒரு செயற்பாடாக இருக்கும் என்பதே உண்மையானது.

சிங்களத் தேசியவாதிகள் இன முரண்பாடுகள் தொடர்பாக கருத்து வெளியிடுவது அவர்களது அடிப்படை உரிமையாகவும் தமிழ்த் தேசியவாதிகளின் இனம் தொடர்பான பேச்சுக்கள் பயங்கரவாதமாகவும் பார்க்கப்படுகின்ற நிலை காணப்படுகின்ற நாட்டில் தமிழர்கள் ஜனாதிபதி வேட்பாளராகத் தமிழர் ஒருவரை பொதுவானவராக நிறுத்தி மீண்டும் ஒருமுறை தம்முடைய தனித்திருத்தல் நிலைப்பாட்டை வெளிப்படுத்த முனைவது சரியானதாகவே இருக்கும்.

நாட்டின் இன்றைய பொருளாதார நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாது என அது பிற்போடப்பட்டது.

ஆனால், மாகாண சபைத் தேர்தலானது அக்காரணத்துக்காக நடத்தாமல் விடப்படவில்லை. அவ்வாறிருக்கையில் பாராளுமன்றம் கலையுமா ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா என்பது சிக்கலானதாக மாறி வருகிறது. மாகாண சபைத் தேர்தல்கள் 7வருடங்களாக நடைபெறாமல் இருக்கிறது.

மாகாண சபைத் தேர்தல் நடத்துவதற்கான காலம் வரும் போது அந்த மாகாண சபைத் தேர்தல் முறையில் மாற்றம் நிறைவு பெறாமை காரணமாகச் சொல்லப்பட்டு வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது. தேர்தல்களை ஒத்திப்போடுவதில் வல்லமையுள்ளவர்களைக் கொண்ட நமது நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்படுவதில் சிக்கல் காணப்படுகிறது. இந்த நிலையில்தான் ஜனாதிபதித் தேர்தலா பாராளுமன்றத் தேர்தலா என்ற எதிர்பார்ப்பிருந்து வருகிறது. எதிர்வரும் தேர்தல்களையும் தள்ளிப் போடுவதற்கான ஆயத்தங்கள் நடந்து வருவதாகக் கூட அச்சம் இருக்கிறது.

தற்போதைய ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்தின் 3ஆவது தவணைக்கான நிதி விடுவிப்பைப் பார்த்தே ஜனாதிபதித் தேர்தலுக்கான முடிவை எடுப்பார் என்ற தகவல்களும் வெளிவருகின்றன.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவிற்கு தமது கட்சியின் சார்பில் ஒருவரை அத் தேர்தலில் களமிறக்க முடியாத நிலையும் காணப்படுகிறது.

இருந்தாலும் தமது கட்சியின் நிலையை நாடி பிடித்துப்பார்ப்பதற்கான தேர்தல் ஒன்றை அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள் எனலாம். அந்தவகையிலேயே பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்கிற நிலைப்பாட்டை அவர்கள் முன்வைத்துவருகின்றன.

இதற்கான சாத்தியங்கள் குறைவாகவே காணப்படுகின்றபோதிலும் இரண்டு தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்தலாம் என்ற முன்மொழிவுகளும் வந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலையில் நிலைபேறான இலங்கையை அடைந்து கொள்வதற்கான எவ்வாறான வழிவகைகள் தேர்தல்களை இலக்காகக் கொண்டு செயற்படுபவர்களிடம் இருக்கின்றன என்பது வினவப்பட வேண்டும்.

அவ்வாறானால், நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீட்டு 2048 இலக்கை நோக்கி நகரும் பிரச்சாரத்துடனான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் முயற்சிகள், அனுரகுமார திசாநாயக்கவின் அரசியல் நகர்வுகளும், சஜித் பிரேமதாசவின் பௌத்த தேசியவாத நிலைப்பாட்டுடனான சிறுபான்மைக் கட்சிகளையும் அனுசரிக்கும் பிரச்சாரம் போன்றவகைளுக்குள் சிக்குண்டதாகவே நிலைபேண்தகு அபவிருத்தி இலக்கு அல்லல்படும் என்பதே நிலைப்பாடு.



# வாழ்வியல் தரிசனம்

ஒருவருக்கு நீங்கள் செய்யும் பெரிய உதவிகள். அதனைப் பெற்றுக் கொள்பவர்கள் தகுந்த முறையில் உபயோகிக்கின்றார்களா என தெரிந்து கொள்வது நல்லது.

இன்று அநேகர் ஒருவரிடமிருந்து பணம் கடனாகப் பெற்று தீய வழியில் செலவிடுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

மனைவி பிள்ளைகளின் தேவைகளை உணராமல் பொறுப்பற்று இயங்கும் பேர்வழிகள் செயலை என்ன என்பது?

எனவே, உங்களைப் பேலப் பலர் ஏமாறுவது உண்டு. உதவி பெறுபவர்கள் கடனாளியாகவே காலத்தை ஓட்டுவதுடன் எந்தவித கடமையையும் உணராது குடும்பத்தை நடுத்தெருவில் விட்டுவிடுவது கண்கூடு.

எல்லா மனிதர்களுக்கும் அறிவு உண்டு. ஆனால், பலர் அதனை மீறி, புலனடக்கமின்றி, அறிவை மூடிக்கொள்கின்றார்கள். பண்பின் வலு புரியாதவர்கள், காலம் அவர்களைத் தண்டிக்கும் போது எந்த நன்மையும் அவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை. கட்டுப்பாடுகள் ஏற்பட்டதே எங்களை நாங்கள் நிலை நிறுத்துவதற்கேயானது.

இந்த முறை சிரமமானது இல்லை. புவனத்தை புனிதமாக்குவதே மாந்தர் பணியாகும்.

–பருத்தியூர் பால– வயிரவநாதன்

## கடிதங்கள்

# கோழி கழிவுகளால் அசௌகரியம்

திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கன்னியா பீலியடி பகுதியில் கோழிகள் வெட்டப்பட்ட கழிவுகள் கொட்டப்படுவதால் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இறைச்சிக்காக வெட்டப்படும் மிருகங்களின் கழிவுகள் இரவு நேரத்தில் வாகனங்கள் மூலம் வீதியோரம் உள்ள கால்வாய்களில் கொட்டப்படுகிறது.

இதன் காரணமாக வரலாற்றுச் சிறப்பு மிக்க கன்னியா வெந்நீர் ஊற்று மற்றும் வெல்கம் விகாரை போன்ற இடங்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் முகம் சுழிக்கும் அளவிற்கு துர்நாற்றம் வீசும் இடமாக இப்பிரதேசம் காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பட்டினமும் சூழலும் (உப்புவெளி) பிரதேச சபை மற்றும் உப்புவெளி பிராந்திய சுகாதார அதிகாரி ஆகியோர் கவனம் செலுத்த வேண்டுமெனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– ராஜ்குமார்



# ஆட்டிசம் ஓர் இயலாமை

லக்ஷிகா லகோஷன்,
ஆராய்ச்சி துறை விரிவுரையாளர் மற்றும் சர்வதேச சுகாதார அறிவியல் கழகத்தின் (International Institute of Health Sciences) நெறிமுறை அனுமதிக்குழுவின் செயலர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் உறுப்பினர்

ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறுகளை மையமாகக் கொண்ட வளர்ச்சி உளவியலில் புகழ்பெற்ற நிபுணரான டாக்டர். சாய்ராம், ஆட்டிசம் கொண்ட குழந்தையை வளர்க்கும் சிக்கலான பயணத்தை வழிநடத்தும் பெற்றோருக்கு விலைமதிப்பற்ற ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்கிறார். அவரது நுண்ணறிவு வழிகாட்டுதல், நம்பிக்கை மற்றும் இந்த தனித்துவமான மற்றும் அடிக்கடி தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட நிலையைப் பற்றிய ஆழமான புரிதலை வழங்குகிறது.

**கே:** இன்று, 'பெற்றோருக்குரிய வழிகாட்டல்கள்' நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்றப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம் இன்று டாக்டர் சாய்ராம், வளர்ச்சி உளவியல் மற்றும் ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறுகளில் நிபுணர் இணைந்து இருப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். டாக்டர் சாய்ராம், எங்களுடன் இணைந்ததற்கு நன்றி.

ப :நன்றி, இது போன்ற அத்தியாவசியமான தலைப்பைப் பற்றி விவாதிக்க இங்கு வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

**கே:** ஆரம்பமாக, ஆட்டிசம் பற்றி பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான அம்சம் என்ன என்று நீங்கள் கூறுவீர்கள்?

ப: மிக முக்கியமான அம்சமானது ஆட்டிசம் ஏற்றுக்கொள்வதாகும், ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்களின் சொந்த பலம் மற்றும் சவால்கள் தனித்துவமானது உங்கள் குழந்தையின் தனித்துவத்தைப் புரிந்துகொள்வதும் ஏற்றுக்கொள்வதும் அவர்களின் வளர்ச்சியை ஆதரிப்பதற்கு பெற்றோர்களது ஈடுபாடு முக்கியமாகும்.

**கே:** பெற்றோர்கள் தங்கள் ஆட்டிசம் கொண்ட குழந்தையின் குறிப்பிட்ட தேவைகளை எவ்வாறு அடையாளம் காண முடியும்?

ப: அவதானிப்பு நெருங்கிய தொடர்பு மற்றும் தொடர்பாடல் இன்றியமையாதது. உங்கள் பிள்ளை அவர்களின் சுற்றுச்சூழலுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார், அவர்களின் தேவைகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் மற்றும் சில நடத்தைகளை எவ்வாறு தூண்டுவது எது என்பதைக் கவனிப்பது அவசியம். இந்த புரிதல் அவர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப ஆதரவை வழங்க உதவுகிறது.

**கே:** நடத்தை சார்ந்த சவால்களைக் கையாள்வதில் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்க முடியுமா?

ப: நிச்சயமாக. நிலைத்தன்மை முக்கியமானது. பழக்கவழக்கங்களை நிறுவுவது ஆட்டிசம் கொண்ட குழந்தைகளுக்கு என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. நடத்தை சிக்கல்களைத் தீர்க்கும்போது, அமைதியாகவும் சீராகவும் இருப்பது முக்கியம். விரும்பத்தகாத நடத்தைக்கான தண்டனையை விட நல்ல நடத்தைக்கான நேர்மறையான வலுவூட்டல் பெரும்பாலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**கே:** ஆட்டிசம் கொண்ட குழந்தைகளுக்கான சமூக ரீதியான வளர்ச்சி பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள் ?

ப: சமூகத் திறன்கள் பெரும்பாலும் ஆட்டிசம் கொண்ட குழந்தைகளுக்கு வெளிப்படையாகத் தெளிவாகக் கற்பிக்கப்பட வேண்டும். விளையாட்டுத் திகதிகளை அமைப்பதன் மூலமாகவோ, குழு நடவடிக்கைகளில் தங்கள் குழந்தையைச் சேர்ப்பதன் மூலமாகவோ அல்லது வீட்டில் சமூகக் காட்சிகளைப் பயிற்சி செய்வதன் மூலமாகவோ பெற்றோர்கள் சமூக தொடர்புகளை ஊக்குவிக்கலாம்.

**கே:** தொடர்ந்து, ஆட்டிசம் கொண்ட குழந்தையின் வளர்ச்சியில் கல்வி என்ன பங்கு வகிக்கிறது?

ப: கல்வி மிகவும் முக்கியமானது. உங்கள் பிள்ளையின் குறிப்பிட்ட கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு தனிப்பட்ட கல்வித் திட்டத்தை உருவாக்க உங்கள் பிள்ளையின் பள்ளியுடன் இணைந்து பணியாற்றுவது முக்கியம். ஆசிரியர்கள் மற்றும் நிபுணர்களுடனான ஒத்துழைப்பு ஒரு ஆதரவான கற்றல் சூழலை உறுதி செய்வதற்கு முக்கியமாகும்.

**கே:** பல பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படுகிறார்கள். ஆட்டிசம் கொண்ட குழந்தைகளுக்கான நீண்டகால விளைவுகளைப் பற்றி நீங்கள் என்ன சொல்ல முடியும்?

ப: ஆட்டிசம் ஒரு வாழ்நாள் முழுவதும் இருக்கும் நிலையிலும் ஆட்டிசம் கொண்ட பல நபர்கள் நிறைவான வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஆரம்பகால இனங்காணல் (early detection) தொடர்ச்சியான ஆதரவு மற்றும் கல்வி ஆகியவை அவர்களை பெரியவர்களாக சுதந்திரமாக செயல்படுவதற்கான நம்பிக்கையை கொடுக்கும்.

**கே:** பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் சுதந்திரத்தை எவ்வாறு ஆதரிக்க முடியும்?

ப: சிறு வயதிலேயே சுய-கவனிப்புத் திறன்களைக் கற்பிப்பதன் மூலம் தொடங்குங்கள். முடிவெடுப்பதை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாப்பான சூழலில் உங்கள் பிள்ளை புதிய விஷயங்களை முயற்சிக்க வாய்ப்புகளை வழங்குதல். அவர்கள் வளரும்போது, தங்களுக்கான இலக்குகளை அமைப்பதில் அவர்களை ஈடுபடுத்துங்கள்.

**கே:** பெற்றோர்கள் எத்தகைய ஆதரவு அமைப்புகளை நாட வேண்டும்?

ப: ஒரு ஆதரவு நெட்வொர்க்கை உருவாக்குவது மிகவும் முக்கியமானது. இதில் குடும்பம் நண்பர்கள், சிகிச்சையாளர்கள் மற்றும் உள்ளூர் ஆதரவுக் குழுக்கள் இருக்கலாம். இந்த நெட்வொர்க்குகள் நடைமுறை ஆதரவை மட்டுமல்ல, உணர்ச்சிபூர்வமான மனஆதரவையும் வழங்குகின்றன.

**கே:** இவர்களுக்கு தொடர்பு ஒரு சவாலாக இருக்கலாம். ஆட்டிசம் கொண்ட குழந்தையுடன் தொடர்பை மேம்படுத்த ஏதேனும் உதவிக்குறிப்புகள் உள்ளதா?

ப: பொறுமை மற்றும் படைப்பாற்றல் (creative) முக்கியம். சில குழந்தைகள் வாய்மொழியாக தொடர்பு கொள்ளலாம். உடல் மொழி மற்றும் பிற தகவல்தொடர்புகளில் கவனம் செலுத்துங்கள். காட்சி சைகை மொழி அல்லது தகவல் தொடர்பு சாதனங்களும் உதவியாக இருக்கும்.

**கே:** பெற்றோர்கள் தங்கள் சொந்த மன ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்வது எவ்வளவு முக்கியம்?

ப: இது மிகவும் முக்கியமானது. மன இறுக்கம் கொண்ட குழந்தையை வளர்ப்பது சவாலானது. ஆதரவைத் தேடுவது, சிகிச்சை மூலமாகவோ, ஆதரவுக் குழுக்கள் மூலமாகவோ அல்லது சுய பாதுகாப்புக்காக நேரத்தை எடுத்துக் கொண்டாலும், மன மற்றும் உணர்ச்சி நல்வாழ்வைப் பேணுவதற்கு முக்கியமானது.

**கே:** நீங்கள் சந்திக்கும் ஆட்டிசம் பற்றிய பொதுவான தவறான கருத்து என்ன?

ப: ஆட்டிசம் கொண்டவர்கள் உணர்ச்சி அல்லது பச்சாதாபம் இல்லாதவர்கள் என்பது பொதுவான தவறான கருத்து. இது உண்மையல்ல. அவர்கள் தங்கள் உணர்ச்சிகளை வித்தியாசமாக வெளிப்படுத்தலாம், ஆனால் அவர்கள் மற்றவர்களைப் போலவே ஆழமாக உணர்கிறார்கள்.அது மறுக்கமுடியாத உண்மை .

**கே:** நாங்கள் முடிப்பதற்கு முன் எங்கள் பார்வையாளர்களுக்கு ஏதேனும் இறுதி எண்ணங்கள் அல்லது ஆலோசனைகள் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீகளா ?

ப: இந்த பயணத்தில் நீங்கள் தனியாக இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். பல ஆதாரங்கள் உள்ளனஇ மேலும் ஆட்டிசம் சமூகம் ஒரு வலுவான, ஆதரவான நெட்வொர்க் ஆகும். உங்கள் குழந்தையின் சாதனைகளைக் கொண்டாடுங்கள், எவ்வளவு சிறியதாக இருந்தாலும், ஒவ்வொரு நாளையும் எப்போதும் நம்பிக்கையுடனும் புரிதலுடனும் அணுகுங்கள்.

**கே:** டாக்டர் தாம்சன், உங்கள் நிபுணத்துவத்தை எங்களுடன் பகிர்ந்து கொண்டதற்கு நன்றி. இந்தப் பயணத்தில் பயணிக்கும் பெற்றோருக்கு உங்கள் ஆலோசனைகள் மதிப்புமிக்கது.

ப: என்னை அழைத்ததிற்கு நன்றி. பெற்றோருக்குரிய ஆலோசனைகளை பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும் எங்களுடன் இணைந்ததற்கு எங்கள் பார்வையாளர்களுக்கு நன்றி. இந்த விவாதம் அறிவூட்டுவதாகவும் ஆதரவாகவும் இருந்ததாக நம்புகிறோம். மேலும் நுண்ணறிவு உரையாடல்களுக்கு அடுத்த முறை எங்களுடன் இணைய காத்திருங்கள்

ஆட்டிசம் ஒரு நோய் அல்ல, அது ஒரு குறைபாடு என்பதை முதலில் புரிந்து கொள்வது அவசியம். இது ஒரு நரம்பியல் தொடர்பான வளர்ச்சிக் குறைபாடாகும். உலக ஆட்டிசம் விழிப்புணர்வு தினம் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 2ஆம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதன் நிமிர்த்தம் இந்த நேர்காணல் தரப்பட்டுள்ளது.

## Aberdeen Holdings இன் சிநேஹதான

# அறக்கட்டளை அறிமுகம்

Aberdeen Holdings, தனது கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு செயற்பாடாக, சிநேஹதான அறக்கட்டளையை அறிமுகம் செய்துள்ளது. அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தினூடாக, சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பு வழங்குவதற்கான நிறுவனத்தின் ஈடுபாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு 3, 17ஆம் ஒழுங்கையில், சினேஹதான சமூக சமையலறையின் அறிமுகத்தினூடாக, இந்த அறக்கட்டளையின் முதலாவது பணி ஆரம்பமாகியது. தற்போதைய நெருக்கடியான சூழலில், பின்தங்கிய நிலையிலுள்ள சமூகத்தார் எதிர்கொண்டுள்ள சிக்கல்களிலிருந்து ஓரளவேனும் நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்காக, 100க்கும் அதிகமான குறைந்தவசதிகள் படைத்த மக்களுக்கு ஒவ்வொரு வேலைநாளிலும் போஷாக்கான இரவு உணவு வேளையை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்திருந்ததுடன், அதனூடாக உணவு பாதுகாப்பின்மையை தீர்ப்பதற்கு Aberdeen இன் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

தனது 14 துணை நிறுவனங்களினூடாகவும், 1300க்கும் அதிகமான ஊழியர்களினூடாகவும் இயங்கும் Aberdeen Holdings, தனது மனிதநேய சென்றடைவை மேலும், விஸ்தரிப்பதற்கு முன்வந்துள்ளது.


இந்த அறக்கட்டளையின் தூரநோக்குடைய நிகழ்ச்சிநிரலில், மேலும் பல சமூக சமையலறைகளை அறிமுகம் செய்வது, ஆபத்தில் உதவும் உணவு மற்றும் கல்வி, கர்ப்பிணி, சுகாதாரம் மற்றும் மருத்துவ நிலையங்களுக்கு விசேடத்துவமான உணவு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றன வழங்கப்படுகின்றன. சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கு Aberdeen இன் அர்ப்பணிப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் இந்தத் திட்டங்கள் அமைந்துள்ளதுடன், சமூகத்தில் அதன் பங்களிப்பை மேம்படுத்துவதாகவும் உள்ளது.



தமது சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளின் மூலம் பொது மக்களுடனான ஈடுபாட்டை மேம்படுத்தும் Aberdeen இன் அர்ப்பணிப்பு, அண்மைய சிநேஹதான அறக்கட்டளையின் இணையத்தள அறிமுகத்தினூடாக மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

Aberdeen Holdings இன் இயக்குநர் ஷபிக் காசிம் அவர்களால் இந்த இணையத்தளம் அறிமுகம் செய்யப்பட்டதுடன், இந்நிகழ்வில் தவிசாளர் சத்தார் காசிம் மற்றும் முன்னாள் தவிசாளர் ஒஸ்மான் காசிம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். இந்தத் திட்டம் தொடர்பில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான திறவுகோலாக இந்தச் செயற்பாடு அமைந்துள்ளது.

2023ஆம் ஆண்டில் சமூக அபிவிருத்தியில் Aberdeen Holdings இன் கீர்த்திநாமம் உறுதி செய்யப்பட்டதுடன், தொடர்ந்தும் முன்னுதாரணமாக இயங்கி, சமூகங்களில் தனிநபர்களின் வாழ்க்கையில் நிலைபேறான மேம்பாடுகளை ஏற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.



## தமிழ், சிங்கள புத்தாண்டு சலுகைகளை

# அறிவித்தது Sun Siyam பாசிகுடா

விருந்தினர்களுக்கு தமிழ், சிங்கள புத்தாண்டை மனம் மறவாத அனுபவத்துடன் வரவேற்கும் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்காக விசேட சலுகைகளை வழங்குவதாக Sun Siyam பாசிகுடா அறிவித்துள்ளது.

கிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல், இந்தப் பண்டிகைக் காலத்தை கொண்டாடுவதற்கு சிறந்த தெரிவாக அமைந்துள்ளது.

இருவருக்கு Half- Board அடிப்படையில் விசேட கட்டணமான ரூ. 36,900க்கு வழங்க முன்வந்துள்ளது.

விசேட சலுகைகளில், இலவச அறை மேம்படுத்தல் மற்றும் நெகிழ்ச்சியான முன்கூட்டிய வருகைகள் மற்றும் பிந்திய வெளியேறல்கள் போன்றன அறைகளின் கிடைப்பனவுகளின் அடிப்படையில் அடங்கியுள்ளன.

ஏப்ரல் மாதம் முழுவதிலும் இந்தச் சலுகை வழங்கப்படுவதுடன், விருந்தினர்களுக்கு ஒப்பற்ற வசதிகளை வழங்கி, பாசிகுடாவின் சொகுசு மற்றும் இரம்மியமான சூழலை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு, அனைவருக்கும் மனம்மறவாத அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்காக பண்டிகைக் காலத்துக்குரிய விநோதமான பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் செயற்பாடுகள் போன்றனவும் அடங்கியிருக்கும்.

மாசற்ற கரையோரப்பகுதிகள் மற்றும் கலாசாரப் பெறுமதிகள் போன்றவற்றுக்கு புகழ்பெற்ற பாசிகுடா, இயற்கை அழகுடன், பிரத்தியேகமான அனுபவங்களையும் வழங்குவதற்கு புகழ்பெற்றுள்ளது.

சொகுசு தங்குமிடம், சிறந்த உணவு, புத்துணர்வூட்டும் ஸ்பா சிகிச்சைகள் மற்றும் பெருமளவு சாகச அனுபவங்கள் போன்ற விருந்தினர்களுக்கு வாழ்நாள் நினைவுகளை ஏற்படுத்தும் வசதிகளை வழங்குகின்றது. Sun Siyam பாசிகுடாவினால், இலங்கையின் விருந்தோம்பல் துறையின் ஒப்பற்ற அனுபவம் வழங்கப்படுகின்றது.

கவர்ச்சிகரமான உள்ளக தோற்றங்களுடன், 34 இடவசதிகள் நிறைந்த ஒன்று முதல் இரண்டு படுக்கையறைகளைக் கொண்ட கார்டின் மற்றும் பீச் பெவிலியன்களைக் கொண்டுள்ளது.

Infinity pool இல் நீச்சல் அனுபவம், நலன் பேணல் சிகிச்சை அல்லது கலாசார செயற்பாடுகளில் பங்கேற்பது என எதுவாக இருந்தாலும், Sun Siyam பாசிகுடாவினால் ஒவ்வொரு அனுபவமும் ஒப்பற்றதாக அமைந்திருப்பது உறுதி செய்யப்படுகின்றது.

உள்நாட்டு கலை மற்றும் கைவினை அம்சங்களுடன் பாசிகுடாவின் காட்சியம்சங்கள் நிறைந்த கரையோர அனுபவம் மேம்படுத்தி வழங்கப்படுவதோடு, ஜொலித்திடும் நட்சத்திரங்களின் கீழே பிரத்தியேகமான இராப் போசண அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையின் பிரத்தியேகமான சுவைகளுடன் தயாரிக்கப்படும் உணவுகளை உண்டு மகிழக்கூடியதாக இருக்கும்.

கிழக்கு கரையோரப் பகுதியில் காணப்படும் சிறந்த வைன் தெரிவுகளுடன், சிறந்த தேநீர் சுவைக்கும் அனுபவத்தை Tea House வழங்குகின்றது.

இவற்றினூடாக விருந்தினர்களுக்கு மனம் மறவாத உணவருந்தும் அனுபவத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அத்துடன், விருந்தினர்களுக்கு Slice & Grill விசேடமான poolside உணவருந்தும் அனுபவத்தை அல்லது Beach Shack இல் கரீபியன் பாணியில், வெப்ப வலயத்துக்குரிய பானங்களை அருந்தும் அனுபவத்தை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

போபால்

# ‘லிவ் இன்’ உறவிலும் ஜீவனாம்சம் கிடைக்கும்

லிவ் இன் உறவில் (திருமணம் செய்யாமல் ஒன்றாக இணைந்து வாழ்வது) வாழும் ஜோடி திருமணம் செய்யவில்லை என்றாலும் கூட பிரிந்து சென்றால் அந்த பெண்ணுக்கு ஜீவனாம்சம் வழங்க வேண்டும் என்று மத்தியப் பிரதேச உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் சமீப காலங்களாக லிவ் இன் உறவுகள் அதிகரித்து வருகிறது. இருப்பினும், இந்த லிவ் இன் உறவில் வாழும் பெண்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு இல்லை என்ற விமர்சனம் இருந்து கொண்டே இருக்கிறது. அதாவது, பல ஆண்டுகள் லிவ் இன் உறவில் இருந்துவிட்டு திடீரென ஆண் விட்டுச் சென்றால் எதுவும் கேட்க முடியாது. மேலும், இருவருக்கும் குழந்தை பிறந்தால்






அதில் இருக்கும் சிக்கல்கள் என லிஸ்ட் பெரிதாகப் போகிறது. இதற்கிடையே இந்த விவகாரத்தில் மத்தியப் பிரதேச உச்சநீதிமன்றம் சில முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. அதாவது சட்டப்பூர்வமாகத் திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும், ஆணுடன் கணிசமான காலம் வாழும் பெண், பிரிந்து சென்றால், அவர்களுக்கு ஜீவனாம்சம் கிடைக்கும் என மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது லிவ் இன் உறவில் வாழும் பெண்களின் உரிமைகளை அங்கீகரிப்பதில் குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று பலரும் பாராட்டியுள்ளனர்.

சென்னை

## ‘அக்னிபான்’ ரொக்கெட் திட்டம் ஒத்திவைப்பு

இந்தியாவின் முதல் செமி கிரையோஜெனிக் என்ஜின் கொண்ட இந்த ரொக்கெட், 300 கிலோ கிராம் வரை எடையிலான ஆய்வுக் கலன்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது.

சென்னையைச் சேர்ந்த விண்வெளி தொழில்நுட்ப ‘ஸ்டார்ட்அப்’ நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ், சிறிய ரக ரொக்கெட்டுகளை ஏவுவதற்காக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மைய வளாகத்தில் தனியார் ஏவுதளத்தை அமைத்துள்ளது.

அவ்வகையில், அக்னிகுல் நிறுவனம் ‘அக்னிபான் சர்டெட்’ எனப்படும் சிறிய ரொக்கெட்டை தயாரித்துள்ளது. இந்தியாவின் முதல் செமி ‘கிரையோஜெனிக் என்ஜின்’ கொண்ட இந்த ரொக்கெட், 300 கிலோ வரை எடையிலான ஆய்வுக் கலன்களை




புவி சுற்றுவட்டப்பாதைக்கு சுமந்து செல்லும் திறன் கொண்டது. 700 கி.மீ. தொலைவு வரை செல்லக் கூடியது. இந்த ரொக்கெட்டை சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து கடந்த மாதம் 22ஆம் திகதி விண்ணில் செலுத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால், இறுதிக்கட்டத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினையால் ரொக்கெட் செலுத்துவது ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் ராக்கெட்டில் இருந்த பிரச்சினைகள் சரிசெய்யப்பட்டு, (ஏப்ரல் 6) காலையில் ரொக்கெட்டை செலுத்த திட்டமிடப்பட்டது. ஆனால், ஏவப்படவில்லை.

அமெரிக்கா

## லிபர்டி சுதந்திர சிலை குலுங்கியது

தாய்வான் தீவு நாட்டில் 25 ஆண்டுகளில் இல்லாத அளவில் மிகவும் சக்திவாய்ந்த (7.5 ரிக்டர்) நிலநடுக்கம் கடந்த ஏப்ரல் 3ஆம் திகதியன்று ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் நியூ ஜெர்சி பகுதிகளில் சுமார் 5.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதேப்போல, அமெரிக்காவின் நியூ யோர்க் நகரிலும் சுமார் 4.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தினால் லிபர்ட்டி தீவில் உள்ள ‘சுதந்திர சிலை’ யும் அசைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை மக்களும் உணர்ந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




அமெரிக்கா

## பூமியை குளிர்விக்க சோதனை

உலக வெப்பமயமாதல் பெரும் தலைவலியாக இந்த பூமிக்கு உள்ளது. பருவநிலை மாறுபாடு, இயற்கை சீற்றங்கள் அதிகரிப்பு ஆகியவற்றுக்கு வெப்பமயமாதலே காரணமாக உள்ளது. கரியமிலவாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தி புவி வெப்பமயமாதலை குறைக்க பல்வேறு முயற்சிகள் எடுக்க உலக நாடுகள் திட்டமிட்டுள்ளன. இதற்காக பாரீஸ் பருவநிலை உச்சி மாநாட்டில் திட்டம் வகுக்கப்பட்டது. எனினும், இந்த திட்டத்தை முழுமையாக பின்பற்ற முடியாமல் உலகநாடுகள் தடுமாறி வருகின்றன.

ஒருபக்கம் இருக்க சமீப ஆண்டுகளில் புவி வெப்பம் அதிகரித்து வருகிறது. கடந்த 2023ஆம் ஆண்டு தான் பூமி அதன் வெப்பமான



ஆண்டை பதிவு செய்தது. வரும் காலங்களில் பூமியில் பதிவாகும் வெப்பம் மேலும் மேலும் அதிகரிக்கும் என்று ஆய்வாளர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் பூமியின் வெப்பத்தைக் குறைக்க ஆய்வாளர்கள் பல்வேறு ஆய்வுகளில் இறங்கியுள்ளனர். பூமியைத் தற்காலிகமாகக் குளிர்விக்க புதிய வழி ஒன்றை அமெரிக்க ஆய்வாளர்கள் முன்மொழிந்து உள்ளனர். அதாவது சூரியனில் இருந்து வரும் சில கதிர்களை மீண்டும் விண்வெளிக்குத் திருப்பி அனுப்புவதே இந்தத் திட்டமாகும்.

கனடா

## அதிக சத்தம் வினையானது

அரசாங்க வீட்டுத் திட்டத்தில் வசித்து வந்த குடும்பம் அதிரடியாக வெளியேற்றப்பட்ட சம்பவமொன்று கனடாவின் ரெஜினா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ரெஜினாவைச் சேர்ந்த தந்தையொருவரும் அவரது ஐந்து பிள்ளைகளும் இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த குடும்பத்தினர் வீட்டில் இருந்த போது, அதிகளவு சத்தம் எழுப்பியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில், குறித்த குடும்பம் குறுகிய அறிவித்தலின் அடிப்படையில் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அந்த குடும்பம் நடு வீதியில் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வாடகை மற்றும் மின்சாரக் கட்டணம் உள்ளிட்டன உரிய முறையில் செலுத்தி வந்ததாக குறித்த குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இங்கிலாந்தை வீழ்த்தி

# ஆறுதல் வெற்றி பெற்ற நியூசிலாந்து

ஐந்து நாள் இருபதுக்கு-20 மற்றும் 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று இங்கிலாந்து மகளிர் அணியை வீழ்த்தி, நியூசிலாந்து மகளிர் அணி ஆறுதல் வெற்றி பெற்றுள்ளது.

இதில் முதலில் நடைபெற்ற இருபதுக்கு-20 தொடரை 4-1 என்ற கணக்கில் இங்கிலாந்து கைப்பற்றியது. இதையடுத்து, நடைபெற்ற ஒருநாள் தொடரில் முதல் இரு ஆட்டங்களின் முடிவில் 2-0 என இங்கிலாந்து முன்னிலை பெற்றது.

இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி ஹாமில்டனில் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் ஆடிய இங்கிலாந்து 46.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 194 ஓட்டங்களுக்கு அனைவரும் ஆட்டமிழக்கப்பட்டனர். இங்கிலாந்து தரப்பில் எமி ஜோன்ஸ் 50 ஓட்டங்களை பெற்றார். நியூசிலாந்து தரப்பில் ஜெஸ் கெர், ஹன்னா ரோவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதையடுத்து, 195 ஓட்டங்கள் பெற்றதால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய நியூசிலாந்து, 39 ஓவர்களில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 195 ஓட்டங்கள் பெற்று, 7 விக்கெட் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது. நியூசிலாந்து தரப்பில் அபாரமாக ஆடிய ஷோபி டெவைன் 100 ஓட்டங்களை பெற்றார். இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றாலும், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து கைப்பற்றியது.




## ரொனால்டோ ஹாட்ரிக் கோல்

சவூதி புரோ லீக் தொடரில் ஏப்ரல் 3ஆம் திகதியன்று நடைபெற்ற ஆட்டத்தில் அல் நாசர் - அபா அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் அல் நாசர் வீரர்கள் ருத்ர தாண்டவமாடி கோல் மழை பொழிந்தனர். அபா அணியால் பதிலுக்கு ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. முழு நேர ஆட்ட முடிவில் அல் நாசர் அணி 8-0 என்ற கோல் கணக்கில் அபா அணியை ஊதித்தள்ளியது.

அல் நாசர் தரப்பில் ரொனால்டோ ஹாட்ரிக் கோல் அடித்து அசத்தினார். மேலும் அந்த அணியில் அப்துல்சிஸ் அல் -அலிவா 2 கோல்களும், சதியோ மேன், அப்துல் மஜீத் மற்றும் அப்துல்ரகுமான் ஆகியோர் தலா 1 கோலும் அடித்தனர்.

இதுவரை முடிவடைந்துள்ள போட்டிகளின் முடிவில் அல் நாசர் 62 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. அல் ஹிலால் 74 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.



## ஜெஸிகா பெகுலா தகுதி

அமெரிக்காவில் நடைபெறும் சார்ல்ஸ்டன் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட, உள்ளூர் நட்சத்திரம் ஜெஸிகா பெகுலா தகுதி பெற்றார்.

காலிறுதியில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அசரென்கா (34 வயது, 26ஆவது ரேங்க்) உடன் மோதிய பெகுலா (30 வயது, 5ஆவது ரேங்க்) 6-4, 3-6, 7-6 (9-7) என்ற செட் கணக்கில் போராடி வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

விறுவிறுப்பான இப்போட்டி 2 மணி, 36 நிமிடங்களுக்கு நீண்டது. கிரீஸ் வீராங்கனை மரியா சாக்ரி (28 வயது, 7ஆவது ரேங்க்) தனது காலிறுதியில் 6-2, 6-4 என நேர் செட்களில் ரஷ்யாவின் குதெர்மதோவாவை (26 வயது, 19ஆவது ரேங்க்) வீழ்த்தினார். டேனியலி கோலின்ஸ் (அமெரிக்கா), டாரியா கசட்கினா (ரஷ்யா) ஆகியோரும் அரையிறுதிக்கு முன்னேறி உள்ளனர். அரையிறுதியில் பெகுலா-கசட்கினா, சாக்கரி - கோலின்ஸ் மோதுகின்றனர்.





## மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

■ பு.கஜிந்தன்

அராலி, முருகன் சனசமூகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்றது.

ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 84ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்தப் போட்டியானது, ஸ்ரீ முருகன் சனசமூகத்துக்கு அருகாமையில் ஆரம்பமானது.

ஆலடிச் சந்தி, அராலி ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் ஆலய வீதி, அராலிப் பாலம், வட்டுக்கோட்டை சந்தி ஊடாக மீண்டும் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தை ஐந்து சுற்றுக்களில் வந்தடைந்தது.

இந்த போட்டியில் யாழ்ப்பாணம் மட்டுமல்லாது வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்த வீரர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இப்போட்டியில், சிறீமுருகன் சனசமூக நிலையத்தினர், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ஹில் சுற்றுலா விடுதியில்

ஹட்டன் குடாகமவில் உள்ள ஆர்ஹில் சுற்றுலா விடுதியில், சிங்கள-தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட மரதன் ஓட்டப் போட்டி (07) நடைபெற்றது. இதில், உள்நாட்டு ஓட்டவீரர்கள் மட்டுமன்றி வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் பங்கேற்றிருந்தனர்.

- ரஞ்சித் ராஜபக்ஷ



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 08, ஏப்ரல் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.